regard to this matter requesting the Government to reconsider it. May I request the Hon. Minister for Health to consider and see that additional centres are given to extensive Blocks?

THE HON. THIRU K. ANBAZHAGAN : The demand is not only even for two, but in so many panchayats it is even for three or four. The demand is always there. But the Government is not able to meet the demand. Therefore, on a rational basis we are attempting to have one Primary Health Centre for every Union and also to build up a proper hospital for that.

*** 195 வினு—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள சித்தையன் கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவரவர்களே, ஆத்தூர் தொகுதியிலுள்ள சித்தையன்கோட்டையிலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் மலைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு ஆஸ்பத்திரி வசதி இல்லை என்று முன்னுள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. எஸ். எஸ். மணி அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசும் ஒத்துக் கொண்டிருந்தது. அதையொட்டி ஆஸ்பத்திரிக்கு நிலமும் அதற்கு 10.000 ரூபாயும் அவ்வூரிலே உள்ள பொதுமக்கள் வசூல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே அரசு மீண்டும் பரிசிலனை செய்து அங்கே ஆஸ்பத்திரி அமைக்க ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படிப் பட்ட கேள்விகளைக் கேட்கின்ற அங்கத்தினர்கள் இதுவரையிலேயுள்ள நடைமுறைய அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். குறிப்பாக, ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு மருத்துவமனை என்ற கொள்கையிருக்கிறபொழுதே, அந்த ஒன்றியத்தில் இப்பொழுதே ஆத்தூர், சின்னுளப்பட்டி என்று 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 374 ஒன்றியங்களில் பெரும்பாலானவைகளில் ஒன்றுக்குக்கூட இன்னும் கட்டிடம் இல்லாத நிலையில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையத்தை அனுமதிப்பதற்கில்லை என்று நான் முதல் கேள்வியின்பொழுது தெரிவித்தேன். இப்பொழுது அந்த ஒன்றியத்தில் 2 மருத்துவமனை உள்ள அங்கத்தினர் 3-வது மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு ஒன்றியத்திற்கு என்று சலுகை காட்டுவது அரசாங்கத்தின் பொதுநோக்கத்திற்கு ஏற்றது அல்ல.

1971 டிசம்பர் 9]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, 374 ஒன்றியங்கள் இருக்கின்ற தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை பிளாக்குகளுக்கு இந்தப் பிரதம சுகாதார நிலையம் இல்லாமல் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பிரதம சுகாதார நிலையம் என்பது இப்போது எல்லா ஒன்றியங்களிலும் ஏற்பட்டுவிட்டது. இரண்டு ஒன்றியங்களில் மட்டும் எந்த இடத்தில் வைப்பது என்பதிலே தகராறு இருந்தது. அதிலே ஒன்றில் தகராறு தீர்ந்து இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. அது சேலம் மாவட்டத்தில் உள்ள ஒன்றியம். மற்றொரு ஒன்றியத்தில் வழக்குக்குப் போயிருக்கிற காரணத்தால் திறக்கப்படவில்லை.

THIRU M. A. LATHEEF : Sir, the Hon. Minister has stated that there should be only one health centre for a Union. At least in areas where there are forests and intractable roads and inaccessable areas but with sufficient human habitation with the Government consider the necessity of having more than one health centre or sub-centre there ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Primary Health Centres are formed with a view to serve the whole Union through a particular type of dispensary and it is not always an ordinary dispensary. Wherever there is necessity the Union also may decide to have some dispensary and the Government will come forward with some help of grant.

பீடித்தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் விடுமுறை

*196 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்குப் பண்டிகை நாட்களில் கூலியுடன் விடுமுறை அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) தேசிய விடுமுறை நாட்களுக்கும் கூலியுடன் விடுமுறை அளிக்க உத்திரவு இடப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ) 19—12—70-ம் தேதியிட்ட அரசு நிலை ஆணை எண் 1833 மூலம் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள், அறிவிப்பு வெளியிட்ட நாளான 27—1—1971 அன்று பீடி அல்லது சுருட்டு அல்லது இரண்டுமே தயாரிப்பது சம்பந்தமான வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழில் நிறுவனங்கள், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய திருவிழா விடுமுறை நாட்கள்) சட்டத்தின் வரம்புகளுக்குட்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 27—1—1971 முதலே நமது பீடித் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஊதியத்தோடு கொடுக்கப்படும் என்ற உத்தரவு போட்ட பிறகும் இன்னும் பல பீடி முதலாளிகள் இதை அமல் நடத்தாமல் இருக்கிறார்கள். அதை அமல் நடத்த அரசு ஏற்ற நடவடிக்கை எடுக்குமா ?